செயற்பொறியாளர் அலுவலகம்,பொபது., தரக்கட்டுப்பாடு கோட்டம், சேப்பாக்கம்,சென்னை- 05.

முன்னிலை: பொறி.ச.பாலமுருகன், M.E., PGDFE.,
செயற்பொறியாளர், பொபது.,

| உ.செ.பொ. | 24/01/25 |
|---|---|
| பி.இ. | 24/01/25 |

செயல்முறை ஆணை எண்.41/ நிஎ2/2025/நாள்: 24.01.2025

பொருள்: பணியமைப்பு - த.நா.அ.ப.தொகுதி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2022 - ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV- ல் தேர்வு செய்து பணிநியமன ஆணை வழங்கப்பட்டு திரு.செ. பாலாஜி,( பிறந்த தேதி:04.08.1997) இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை - 03 அவர்களின் கடித எண். 1970/PSD - D2/2023/நாள்: 31.08.2023
2. முதன்மை தலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது), நீர்வளத்துறை, சென்னை - 05 அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ் 3(3)/35336/2023, நாள்: 22.09.2023.
3. முதன்மைத் தலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது)., பொபது., சேப்பாக்கம், சென்னை - 05 அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ்2(1)/022209/2023/நாள்: 30.11.2023
4. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.233/நிஎ2/2023/நாள்: 01.12.2023
5. உதவி செயற்பொறியாளர் பொபது., தரக்கட்டுப்பாடு உபகோட்டம், திருவள்ளூர், அவர்களின் கடித எண்:04/உசெபொ(தி)/2025/நாள்:10 .01.2025.

உதவி செயற்பொறியாளர் பொ.ப.து. அலுவலகம், திருவள்ளூர்
எண் : 05.
நாள் : 24.01.25

******

பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பார்வை 2-ல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர், (பொது), நீர்வளத்துறை, சென்னை - 05 அவர்களின் ஆணையின்படி இக்கோட்ட கட்டுப்பாட்டிலுள்ள தரக்கட்டுப்பாடு உபகோட்டம் திருவள்ளூர் அலுவலகத்திற்கு திரு. செ. பாலாஜி இளநிலை உதவியாளர் பதவிக்கு பணியமர்வு செய்யப்பட்டு 08.12.2023 மு.ப அன்று இக்கோட்டத்தில் பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

2. தனியருக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 14/2016-ன்படி இளநிலை உதவியாளராக அவர் பணியில் சேர்ந்த நாளான 08.12.2023 மு.ப பணிவரன்முறை செய்தும், தனியரது தகுதிகாண் பருவத்தை மூன்றாண்டு தொடர் பணிகாலத்தில் இரண்டாண்டு காலத்தை தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் துவக்கியும் இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது. தனியர் தகுதிகாண்பருவகாலத்தில் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

3. பார்வை 2-ல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர், மற்றும் தலைமைப்பொறியார் (பொது), பொபது., சேப்பாக்கம், சென்னை-05, அவர்களின் ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி, இவ்வானை சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள தீர்ப்புக்கு உட்பட்டது என்கிற நிபந்தனையுடன் இவ்வாணை வழங்கப்படுகிறது.

| பெயர் | பிறந்த தேதி | தேர்வாணைய வரிசை எண் | பணியில் சேர்ந்த அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| திரு. செ. பாலாஜி இளநிலை உதவியாளர் | 04.08.1997 | 32 | உதவிசெயற்பொறியாளர், பொபது., தரக்கட்டுப்பாடு உபகோட்டம், திருவள்ளூர் | 08.12.2023 மு.ப | 08.12.2023 மு.ப |

24/01/2025

செயற்பொறியாளர், பொபது.,
தரக்கட்டுப்பாடு கோட்டம்,
சேப்பாக்கம், சென்னை-05

24/01/25
24/01/2025

பெறுநர்:
திரு.செ. பாலாஜி
இளநிலை உதவியாளர், பொபது.,
வழி:தரக்கட்டுப்பாடு உபகோட்டம்,
திருவள்ளூர்.